# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2041 (ஆனி-ஆடி) ஜூலை 2010 ஏர்-25, உழவு-7, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
BRT.சென்னியப்பன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : BRT.சென்னியப்பன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | செல்வி ஃபீட்ஸ் கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்


| | | |
|---|---|---|
| பொருளடக்கம் | - | 1 |
| தலையங்கம் | - | 2 |
| செயலாளர் அறிக்கை | - | 3 |
| மாளிகை திறப்பு விழா | - | 5 |
| நன்றி மடல் | - | 8 |
| திருமண தகவல் மையம் | - | 11 |
| மணமகள் தேவை | - | 12 |
| உணவு | - | 13 |
| மாளிகை திறப்பு விழா | - | 15 |
| செட்டிகுளம் சின்ன நிலம் | - | 19 |
| மணமகள் தேவை | - | 21 |
| வாழ்த்துகிறோம் | - | 22 |
| முதன்மை பெண்மணிகள் | - | 24 |
| மணமகள் தேவை | - | 26 |
| மணமகன் தேவை | - | 30 |

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



புதிய கட்டிடம் தீரன் சின்னமலை மாளிகையின் இறுதி கட்டப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. கொங்குநாடு அறக்கட்டளைக்கு நாம் கொடுக்க வேண்டியது ரூபாய் 45 லட்சத்தில் முதல் தவணையாக ரூ. 10 இலட்சத்தைக் கொடுத்திருக்கிறோம். மீதித் தொகை ரூ. 35 இலட்சத்தைக் கொடுக்க வங்கிக்கடனுக்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. சங்கத்தின் நிதி நிலைமை பற்றாக்குறையாய் இருக்கிறது.

சங்கத்தின் நிதி நிலைமையைப் புரிந்து கொண்டு சங்க உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கட்டிட நிதியை அனுப்பாதவர்கள் ரூபாய் ஆயிரம் உடனே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சங்கத்திற்காக நேரத்தைச் செலவிட்டு சங்க செயற்குழு உழைத்துக்கொண்டிருக்கும்போது உங்கள் பங்கை நீங்கள் செலுத்துவதை தாமதிக்காதீர்கள்.

ஊருக்கு ஊர் சங்கங்களும், கூட்டமைப்பும், கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையும் இருந்தாலும் இன்னும் நம் சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் தொடர்பிலே குறை இருக்கிறது. இதற்கொல்லாம் காரணம், நம்மில் பலபேருக்கு தேவைப்பட்டால் மட்டும் தொடர்பு கொண்டால் போதும் என்ற எண்ணம் இருப்பதுதான். நாம் உண்டு நம் வேலை உண்டு என்று நினைப்பதுதான். ஆனால் நமக்கொரு தேவை வரும்போது சமுதாயத்திலிருக்கும் அனைவரும் நமக்கு உதவ வேண்டும் என்றும், கவுண்டர் சமுதாயத்தில் பிறந்தாலே அது பிறப்புரிமை என்றும் நினைக்கிறோம். திடீரென்று உறுப்பினராக வேண்டுமென்பார். கேட்டுக் கேட்டு வராத கட்டிடநிதி திடீரென்று வரும். அடுத்தநாள் பார்த்தால் அவர்களுக்கு ஏதாவது இந்தச் சமுதாய சங்கத்தின் உதவி தேவைப்படும்.

நம் சமுதாய சங்கம் என்பது நமது குடும்பம்போல, நமக்குள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டும். சங்கம் என்பது யாருக்கும் தனிப்பட்டமுறையில் சொந்தமல்ல. நாம் தான் சங்கம். உங்களுக்கு உதவி தேவைப்படும் போது சங்கம் செய்யும். இன்று உங்கள் உதவி சங்கத்திற்குத் தேவை. நமக்குள் ஒற்றுமை தேவை.

நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன்,

நன்றி.

பி.சென்னியப்பன்

தலைவர்

# செயலாளர் அறிக்கை

அன்புடையீர், வணக்கம்.



கொங்கு மாவீரன் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டதும், தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழா வெகு சிறப்பாக நடந்ததும் இந்த ஆண்டு சங்க வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளாகும்.

சின்னமலை மாளிகையின் மீதமுள்ள வேலைகள் முடியுந்தறுவாயில் உள்ளன. வெளியூர்களிலிருந்து சென்னை வரும் கொங்குச்சொந்தங்களுக்கு இந்த மாளிகை பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். கொங்கு இல்லம், வெள்ளிவிழா இல்லம், தீரன் சின்னமலை மாளிகை ஆகிய மூன்று இல்லங்களையும் சங்க உறுப்பினர்களும், கொங்குச் சொந்தங்களும் பயன்படுத்திக்கொள்ள பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறைந்த வாடகையில், நல்ல வசதிகளோடு, சிறந்த பாதுகாப்போடு, தமிழகமெங்கிலும் சென்னை வந்து தங்கும் கொங்கு நண்பர்களின் சுற்றத்தோடு தங்குவதற்கு நமது சங்கம் வழங்கும் இந்த சிறப்புமிக்க சேவையைப் பயன்படுத்திக்கொள்வர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தீரன் சின்னமலை மாளிகை மிக அருமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்று கூறி, அதற்குப் பொறுப்பேற்றுச் சிறப்பாக உருவாக்கியதற்கு வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் பல கொங்கு சொந்தங்கள் நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், மின்னஞ்சல் வாயிலாகவும் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரிய வாய்ப்பை எனக்கு வழங்கிய சங்க நிர்வாகிகளுக்கும், என்னோடு உழைத்த அனைத்து அன்பர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டட நிதிக்கு தொடர்ந்து நன்கொடைகள் வந்தவண்ணம் உள்ளன. இன்னும் நன்கொடை அளிக்காத உறுப்பினர்கள் உடனே அனுப்பினால் பேருதவியாக இருக்கும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி !

பரணி கே.பாலசுப்பிரமணி
செயலாளர்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 56,85,178 |
| 974 | | R.தேவராஜன் | 50,000 |
| 975 | | துரைசாமி<br>Intech Systems Chennai (P) Ltd. | 25,000 |
| 976 | | Dr. P.G.சின்னிகிருஷ்ணன் | 20,000 |
| 977 | 062 | P.சுப்பிரமணி | 10,000 |
| 978 | | K.ராமசாமி | 5,005 |
| 979 | | R.பொன்னுசாமி | 5,000 |
| 980 | 3382 | V.K.முருகேசன் | 1,000 |
| 981 | 3352 | D.நந்தகுமார் | 1,000 |
| 982 | 3353 | D.பழனிசாமி | 1,000 |
| 983 | 0207 | V.கலைசாமி | 1,000 |
| 984 | 0206 | V.முருகேசன் | 1,000 |
| 985 | 0205 | S.சந்தரசேகரன் | 1,000 |
| 986 | 3354 | K.S.குழந்தைவேலு | 1,000 |
| 987 | 3357 | P.மருதாசலம் | 1,000 |
| 988 | 3342 | C.சுப்பரமணியம் | 1,000 |
| 989 | 3355 | M.ஸ்ரீபதி | 1,000 |
| 990 | 0209 | Er.S.நேதாஜி | 1,000 |
| 991 | 3363 | M.சாம்பசிவம் | 1,000 |
| 992 | 3358 | E.L.கிரி | 1,000 |
| 993 | 3362 | R.குணசேகரன் | 1,000 |
| 994 | 2029 | K.அம்மையப்பன் | 1,000 |
| 995 | | S.ஜெணனி LH | 1,000 |
| 996 | 2261 | K.தட்சணாமூர்த்தி | 1,000 |
| 997 | | M.N.சின்னசாமி | 1,000 |
| 998 | | M.தாரணி LH | 1,000 |
| 999 | | P.துரைராஜ் | 1,000 |
| 1000 | | S.கலையப்பன் | 1,000 |
| 1001 | 3387 | G.நல்லுசாமி | 1,000 |
| 1002 | 3388 | R.S.அன்புத்தம்பி | 1,000 |
| 1003 | 3389 | M.செந்தில்குமரன் | 1,000 |
| 1004 | 0211 | D.சண்முகம் | 1,000 |
| 1005 | 0210 | E.குழந்தைவேல் | 1,000 |
| 1006 | | A.P.இந்துமதி L.H. | 1,000 |
| 1007 | | S.V.சரண்யா L.H. | 1,000 |
| 1008 | 3360 | L.மாணிக்கசுந்தரம் | 1,000 |
| 1009 | 3359 | C.துரைசாமி | 1,000 |
| 1010 | | S.N.சரண்யா L.H. | 1,000 |
| 1011 | | Dr.K.C.கண்ணன் | 1,000 |
| 1012 | | R.ரம்யா L.H. | 1,000 |
| 1013 | 0203 | R.யுவராஜ்குமார் | 1,000 |
| 1014 | 2615 | N.துரைசாமி | 1,000 |
| | | மொத்தம் | 58,35,183 |

# தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழா

**திரையுலக மார்கண்டேயன், கம்பன் காதலன் திரு. சிவக்குமார் அவர்களின் வாழ்த்துரை :–**



நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் கொங்கு நாட்டிற்குப் பெரும் பெருமை சேர்த்த கொங்கு மாவீரன் தீரன் சின்னமலை நினைவாக இம்மாளிகை கட்டப்பட்டுள்ளது. இக்கட்டிடத்திற்காக தன் உயிரையே கொடுத்தவர், முன்னாள் தலைவர் திரு.கேஆர்பிமோகன் அவர்கள். இம்மாளிகை கட்ட இரவு பகலாகப் பாடுபட்டவர் திரு. பரணிபாலு அவர்கள். கொங்குச் சமுதாயத்திற்காக அயராமல் உழைத்து வருபவர் திரு. பி.சென்னியப்பன் அவர்கள். இம்மாளிகையைச் சிறப்பாகக் கட்டி முடித்துள்ள சங்க நிர்வாகிகளுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வியாபாரம் செய்ய வந்த வெள்ளைக்காரன்கள் 1750 ஆம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனியைத் துவக்கினர். 1757ல் பிளாசி யுத்தம் நடைபெற்றது. 1799 ஆம் ஆண்டு வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டான். 1801 ஆம் ஆண்டு தீரன் சின்னமலை ஆங்கிலேயரை எதிர்த்து கொங்கு மண்ணில் செய்த முதல் போரில் கர்னல் மாக்ஸ்வெல் தலைமையில் வந்த ஆங்கிலப்படையை வென்றான். 1802 இல் ஓடாநிலையில் நடைபெற்ற இரண்டாம் போரில் கர்னல் மேக்ஸின் தலையைச் சின்னமலை தன் வாளால் கொய்து அதை ஊர்வலமாக எடுத்துச் சென்றான். 1804ல் அறச்சலூரில் ஜெனரல் ஹாரிஸின் குதிரைப்டையை எறிகுண்டால் தாக்கிக் திக்கிமுக்காடச்செய்தான். நல்லப்பன் என்ற சமையல்காரன் செய்த துரோகச் செயலால் வெள்ளையர்களிடம் பிடிபட்ட சின்னமலையும், தம்பிகள் பெரியதம்பி, கிலேதார் ஆகியோரும் 1805 ஆம் ஆண்டு ஆடிப்பதினெட்டு அன்று சங்ககிரி மலைக்கோட்டையில் இருந்த ஆலமரத்தின் அருகே தூக்கிலிடப்பட்டனர்.

வீரம், தியாகம், நாட்டுப்பற்று போன்ற அருங்குணங்கள் கொண்டு நாட்டிற்காகத் தன் இன்னுயிரைத் தந்த மாவீரன் தீரன் சின்னமலையின் பெயரால் இம்மாளிகை அமைந்துள்ளது பெரும் சிறப்பு வாய்ந்ததாகும். திரு.பெஸ்ட் இராமசாமி கொங்குநாடு முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணங்களை விரிவாகக் கூறினார். அவையெல்லாம் நியாயமான காரணங்கள்தான்.

கலைஞன் எல்லோருக்கும் பொதுவானவன். ஓர் இனத்திற்கு மட்டும்

சொந்தமல்ல. எனவே நானும் என் மகன்களும் திரைத்துறையில் கலைஞர்கள் என்ற வகையில் எல்லோருக்கும் பொதுவாக, எல்லோருடைய ஆதரவாலும் இருக்கிறோம். இருப்பினும், தனிப்பட்ட மனிதனாக திரு.பெஸ்ட் இராமசாமி அவர்களுக்கு என்றும் தோள் கொடுப்பேன் என உறுதி கூறுகிறேன். திரு. விசி.பெருமாள், கோவை செழியன் அவர்களுடைய உருவப்படத்தை நான் வரைய வேண்டும் என்றும், அதை இந்த மாளிகையில் வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். ஓவியம் வரைவததற்குக் கண்கள் மிகவும் முக்கியம். ஓர் அழகான முகத்திற்கு அடையாளம் கண், மூக்கு ஆகியவையாகும். நம் முதல்வர் கலைஞர் கூட யார் யார் படத்தையெல்லாம் வரைகிறாய்; என் படத்தை எப்போது வரைந்து தருவாய் எனக்கேட்டுக்கொண்டிருந்தார். 1969 ஆம் ஆண்டு அவர் பதவியேற்ற போது எடுத்த நிழற்படத்தைப் பார்த்து, அவரது படத்தை வரைந்து கொடுத்தேன். ஏனெனில் அந்தப் படத்தில்தான் அவருடைய கண்கள் அழகாகத் தெரிந்தன.

திரு.கோவை செழியன் என்னை வைத்துப் படமெடுத்தவர். சிறந்த ஆளுமைத்தன்மை நிறைந்தவர். கடைசி வரை சிங்கமாக வாழ்ந்தவர். அப்படிப்பட்ட சிறப்புகள் நிறைந்த அவரது ஓவியத்தை விரைவில் வரைந்து கொடுப்பேன் என உறுதி கூறுகிறேன்.

மண்டபம் கட்டவேண்டும் என்று கூறினார்கள். திருப்பூரில் நானும் திரு.சத்யராஜ் அவர்களும் சேர்ந்து நட்சத்திர இரவு நிகழ்ச்சி நடத்தி, அந்தக் காலத்திலேயே ரூ. 50 லட்சம் வசூலித்துக் கொடுத்தோம். இப்போது என் பிள்ளைகள் இருவரும் புகழ்பெற்ற நடிகர்களாக உள்ளனர். நானும் அவர்களும் சேர்ந்து அதுபோன்ற நட்சத்திர இரவு நிகழ்ச்சி நடத்திக்கொடுக்கத் தயாராக உள்ளோம் எனக் கூறிக்கொள்கிறேன். அந்த நிதியிலிருந்து மண்டபம் கட்டிக்கொள்ளலாம்.

சமுதாயத்திற்கு உழைக்கும் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்".

இவ்வாறு திரு.சிவக்குமார் உரையாற்றினார்.

**கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளை தலைவர் திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து அவர்களின் வாழ்த்துரை :–**

சங்கத்தின் சாதனை மகுடத்தில் வைரக்கல்லாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள தீரன் சின்னமலை மாளிகையின் இரண்டாம் தளத்தைத் திறந்துவைக்க வாய்ப்பளித்தமைக்கு, சங்க நிர்வாகிகளுக்கு எனது நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். கரூர் கொங்கு சொந்தங்கள், நண்பர்கள் மற்றும் கொங்கு கல்வி அறக்கட்டளை நிர்வாகிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களால்தான், 180 கொங்கு சொந்தங்களிடமிருந்து தலா ரூ, 10,000 வசூலித்து அவர்களைச் சங்கத்தில் உறுப்பினர்களாக்கி, 18 லட்சம் ரூபாயை சங்கத்திற்குக் கொடுக்க முடிந்தது.

சென்ற ஆண்டில் ஒரு நாள் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நடந்த அன்று சென்னை வந்திருந்தேன். செயலாளர் திரு. பரணி பாலு அவர்கள் என்னை சங்கத்திற்கு வரவழைத்து புது கட்டடப் பணிகளுக்குப் பணப் பற்றாக்குறையைப் பற்றிக் குறிப்பிட்டு, ஏதாவது செய்ய முடியுமா எனக் கேட்டார். நாம் முதலில் நன்கொடை கொடுத்தால்தான், பிறரும் உதவுவார்கள். அந்த வகையில்தான் 180 உறுப்பினர்களைச் சேர்க்க முடிந்தது. நம்மால் எதையும் சாதிக்க முடியும். தற்போது 3500 உறுப்பினர்கள்தான் சங்கத்தில் உள்ளனர். ஒவ்வொரு உறுப்பினரும் முயற்சியெடுத்து புது உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும். நிர்வாகிகள் உழைக்கவும், பாடுபடவும், சாதனைகள் புரியவும் தயாராக உள்ளனர். செய்து வருகிறார்கள். நாம் நிதி உதவியாவது அளித்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இந்த நேரத்தில் அமரர் திரு.மோகன் அவர்களின் அரும்பணியையும், திரு.பரணி பாலு அவர்களின் அயரா உழைப்பையும் நாம் போற்றக் கடமைப்பட்டுள்ளோம். மாணவர்களுக்கு IAS / IPS பயிற்சியளிப்பதோடு நிறைய கட்டடங்கள், மண்டபங்கள், விடுதிகள் கட்ட வேண்டும். என்னால் இயன்ற உதவியை எப்போதும் செய்வேன் என உறுதி கூறுகிறேன். தற்போது மேலும் ரூ 3லட்சம் கொடுக்கிறேன்".



இவ்வாறு திரு.அட்லஸ் எம்.நாச்சிமுத்து உரையாற்றினார்.

விழா நிகழ்ச்சிகளை சங்கத்தின் துணைத்தலைவர் திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன், செயற்குழு உறுப்பினர்கள் டாக்டர் மணிமேகலை புஷ்பராஜ் மற்றும் திருமதி உத்தமிபொன்னுாமி ஆகியோர் தொகுத்து வழங்கினர். விழாவில் கலந்து கொண்ட அனைவர்க்கும் கொங்கு மணம் கமழும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இறுதியில் சங்கப்பொருளாளர் திரு. ஆர்.செல்வராஜ் விழாவில் கலந்துகொண்ட சிறப்பு விருந்தினர்கட்கும், கொங்குச் சொந்தங்களுக்கும், மாளிகை கட்ட இடமளித்த டாக்டர் உன்னிகிருஷ்ணன் தம்பதியருக்கும், விழா நடத்த இடமளித்த பள்ளி நிர்வாகத்தினருக்கும், விழா ஏற்பாடுகள் செய்த நிர்வாகிகளுக்கும் நன்றி கூறினார்.

❖❖❖❖

# நிதிகொடுத்த நல்லுள்ளங்களுக்கு நன்றி



சர்வதேசத் தரச் சான்றிதழ்களைப் பெற்று இந்திய அளவில் புகழ் பெற்று விளங்கும் சக்தி மசாலா நிறுவனத்தின் இயக்குநரும், இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கொங்கு மாமணி திரு.பி.சி.துரைசாமி அவர்களின் துணைவியாரும், மங்காப் புகழ் கொங்கு குலத்தில் பிறந்து சாதனைகள் பல புரிந்துள்ளவருமான திருமதி சாந்தி துரைசாமி அவர்கள் பல சிறப்புகளைப் பெற்றவர்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளிலும் சக்தி மசாலா பொடிகள் சமையலுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 34 ஆண்டுகளுக்கு முன் சிறு முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட சக்தி மசாலா நிறுவனம் இன்று மாபெரும் வளர்ச்சி பெற்று சுமார் 1000பணியாளர்களைக்கொண்ட உலகப்புகழ்பெற்ற நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தொழிற்துறையில் இந்தச் சாதனைக்குக் காரணமாக விளங்கும் திருமதி சாந்தி அவர்களும், அவருடைய கணவர் திரு. பி.சி.துரைசாமி அவர்களும் சமூக சேவையிலும், சமுதாய சேவையிலும் தங்களை ஈடுபத்திக்கொண்டு செல்வாக்கோடும், புகழோடும் வாழ்ந்து வருகிறார்கள்.

'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு'

என்றார் வான்புகழ் வள்ளுவர். தகுதியுடையோர் நலனுக்கு உதவிடும் பொருட்டே ஒருவர் முயன்று திரட்டிய பொருள் பயன்பட வேண்டும் என்று கூறுகிறார் வள்ளுவர். இந்தக் குறள்வழி நின்று வாழ்பவர் இத்தம்பதியர் என்றால் மிகையாகாது. அவர்கள் தோற்றுவித்த சக்தி தேவி அறக்கட்டளை மூலமாக சக்தி மறுவாழ்வு மையம், சக்தி மருத்துவமனை, தளிர்–மரம் வளர்ப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பு ஊக்குவிப்புத்திட்டம், கல்வி உதவித் திட்டம், மருத்துவ உதவித்திட்டம் போன்ற சமுதாயப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

சக்தி மசாலா நிறுவனத்தில் 300 க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த மனிதநேய சாதனை ஈடுஇணையற்றது. ஈரோடு மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வுகளில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தேசிய அளவிலும், மாநில அளவிலும் எண்ணற்ற விருதுகளைப் பெற்றுள்ளனர், இத்தம்பதியர். நேர்மையான வணிக முறைகள், தரமான தயாரிப்பு, மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் ஒளிதீபம் ஏற்றிவைத்த மனிதநேய மாண்பு, சிறந்த தொழில்நிறுவனம், சமூக சேவை, கல்வித் தொண்டு எனப் பல்வேறு

காரணங்களுக்காக விருதுகள் பெற்ற இவர்கள் தமிழ்நாட்டிற்கும், குறிப்பாகக் கொங்கு சமுதாயத்திற்கும் பெரும் பெருமை சேர்த்துள்ளனர்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வரும் இவர்கள், தீரன் சின்னமலை மாளிகைக் கட்டிட நிதியாக ரூ. 10 இலட்சம் கொடுத்துள்ளனர். மேலும் வட்டியில்லாக்கடனாக ரூ. 15 இலட்சம் கொடுத்துள்ளனர். திருமதி சாந்தி துரைசாமி அவர்களின் சாதனைகளுக்காக, மனித நேயத்திற்காக, சங்க வளர்ச்சிக்கு நிதியை வாரி வழங்கிய வள்ளல் தன்மைக்காக கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

## நிதிகொடுத்த நல்லுள்ளத்திற்கு நன்றி

2008 ஆம் ஆண்டு ‘கொங்கு சாதனையாளர்’ விருதைப் பெற்றவர் திரு அட்லஸ் எம்.நாச்சிமுத்து.



1965 ஆம் ஆண்டு சிறிய முதலீட்டுடன் ஒரு மின்சாரப் பொருட்கள் விற்பனை கடையை ஆரம்பித்த இவர், கரூர் சீட்பண்ட்ஸ், கரூர் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், அட்லஸ் பேப்ரிக்ஸ், அட்லஸ் எக்ஸ்போர்ட் எண்டர்பிரைசஸ் போன்ற பல நிறுவனங்களைத் தொடங்கி தொழிற்துறையில் சிறந்து விளங்கி வருகிறார்.

கரூர் ஏற்றுமதியாளர் அமைப்பின் பொருளாளர், கைத்தறி நெசவாளர் மேம்பாட்டுக்கூட்டமைப்பின் உயர்மட்ட செயற்குழு உறுப்பினர், கொங்கு கல்வி அறக்கட்டளையின் தலைவர், டெக்ஸ்டைல் பார்க் அமைப்பின் தலைவர் போன்ற பல பொறுப்புகளையேற்று பலரும் பாராட்டும்வண்ணம் பணியாற்றி வருகிறார்.

கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் 2000 பேர் அமரக்கூடிய அட்லஸ் கலையரங்கத்தை ரூபாய் மூன்று கோடி வசூலித்துக்கட்டியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு, ஈதல் இசைபட வாழ்தல் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்து வரும் இந்தத் தொழிலதிபர் கல்விப்பணி, சமுதாயப்பணி, சமூக சேவை ஆகியவைகளில் ஈடுபட்டு, மக்கள் பாராட்டும் வண்ணம் சீரிய தொண்டாற்றி வருகிறார்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்கு இவருடைய பங்கு பாராட்டத்தக்கது. சங்கத்தின் செயல்பாடுகளில் தீவிரமாகப் பங்காற்றி வரும் இவர் 200 பத்தாயிரம் ரூபாய் உறுப்பினர்களை சங்கத்திற்குச் சேர்த்துக்கொடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. தீன் சின்னமலை மாளிகை கட்டட நிதிக்காக 7 இலட்சம் ரூபாய் நன்கொடையாக அளித்துள்ளார்.

கொங்கு வேளாளரின் ஈகைத்தன்மைக்கும், கடும் உழைப்பிற்கும் நல்லதொரு உதாரணமாக திகழ்ந்து வரும் அட்லஸ் எம். நாச்சிமுத்து அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

# நிதிகொடுத்த நல்லுள்ளத்திற்கு நன்றி

அரவிந்த டிரேடர்ஸ் கொங்குமாமணி, திரு.வி.கே.தங்கவேல் அவர்கள் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, விவசாயக் கூலியாக வாழ்க்கையைத் துவங்கி, டெய்லராக, ஊர் ஊராக ஜவுளி கவுன் விற்பவராக, நூல் வியாபாரியாக, கைத்தறி துணி



உற்பத்தியாளராக உயர்ந்துள்ள இவரது நிறுவனம் கைத்தறித் துணி ஏற்றுமதியில் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களின் ஒன்றாக உலகத்தரச்சான்றான ISO 9001-2000 மற்றும் ISO 14001 சான்றிதழ் பெற்றுள்ளது. இவர் கொங்கின இளைஞர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக, ஊக்கமளிப்பவராகத் திகழ்ந்து வருகிறார். பெரியஅளவில் காற்றின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் (Non Conventional Energy - Wind Mills) தொழிலில் ஈடுபட்டு கரூர் நகர ஜவுளி ஏற்றுமதியாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறார். விவசாயத் தொழிலில் இயற்கை வேளாண்மை முறைகளைக் கையாண்டு மற்ற விவசாயிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

இவர் பல ஆண்டுகளாக தமிழகத்தில் உள்ள அனைத்து பெரிய கோயில்களுக்கும் அன்னதானம் செய்துகொண்டிருக்கிறார். ஆனால் அதைத் தனிப்பட்ட முறையில் செய்யாமல் கரூர் மக்கள் எனக் குறிப்பிடுவார். கரூர் பள்ளியில் இரண்டு கட்டிடங்களை இவரது செலவில் கட்டிக் கொடுத்திருக்கிறார். பிறகு கரூர் மக்களுக்காக இவரது செலவில் கிரிமிடோரியம் (இறுதிகாரியம் நடைபெறுமிடம்) ஒன்று உருவாக்கி உள்ளார். அங்கு அவர் அனைத்து மதத்தினரையும் உறுப்பினராகச் சேர்த்து மிக சிறப்பாக நடத்தி வருகிறார். ஏழைமக்களுக்கு உதவும் வகையில் குறைந்த செலவில் ஆம்புலன்ஸ் வசதி செய்துகொடுத்திருக்கிறார். கரூர் மருத்துவ மனையில் பிரசவபகுதிக்கு **35** மெத்தையுடன் (பெட்) கட்டிடம் ஒன்று கட்டி கொடுத்து இன்றும் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இவர் தன்னைப்பற்றி விளம்பரம் செய்ய விரும்பாதவர். கரூர் மக்கள் நெஞ்சில் நீங்காத இடம் வகிக்கிறார்.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வளர்ச்சியில் பெரும் பங்காற்றி வரும் இவர் தீரன்சின்னமலை மாளிகையின் கட்டட நிதிக்கு முதன் முதலாக ரூ. **5** லட்சம் கொடுத்து கட்டடம் கட்ட ஆரம்பிக்க உதவிய பெருமை இவரையே சார்ந்தது. கொங்குமாமணி திரு. வி.கே.தங்கவேல் அவர்களின் சாதனைகளுக்காகவும், தீரன் சின்னமலை மாளிகை கட்டட நிதிக்கு அள்ளித்தந்து உதவிய வள்ளல் தன்மைக்காகவும் கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

**திருத்தம்** : சென்ற இதழில் கிரிமிடோரியம் (இறுதிகாரியம் நடைபெறுமிடம்) கட்டிக்கொடுத்தது திரு.அட்லஸ் நாச்சிமுத்து என்று தவறாக வெளியாகிவிட்டது. கிரிமிடோரியம் கட்டிக்கொடுத்தது. கரூர் திரு. வி.கே.தங்கவேலு அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## வாழ்க, வளர்க, வெல்க கொங்கு நண்பர்கள் சமுதாயம்

வாழ்நாள் முழுவதும் வீட்டில் இருந்தபடியே பணம் சம்பாதிக்க வழிகாட்டும் வழிமுறைகள் :–

வியாபாரம் நம் தலைமுறைக்கும் போய் சேரும். படிப்பு வயது தேவை இல்லை.நாமும் நன்றாகப் பணம் சம்பாதித்து மற்றவர்களையும் பணம் சம்பாதிக்க வைப்பதன் மூலம் எல்லோரும் உன்னத நிலையை அடைய வழிகாட்டும் வியாபாரம். சர்க்கரை நோய், மாரடைப்பு (colestral) புற்றுநோய், அல்சர், பிரசர், தைராய்டு, பெண்கள் சிறிய வயதில் படுவடைதல், சரியான முறையில் மாத விடாய் சுழற்சி மற்றும் பெண்களுக்கு கர்ப்பப்பை பாதுகாத்தல் போன்றவைகளை சரியான முறையில் பாதுகாக்க உதவும், Food Product World process (உலக இயற்கை உணவுகள்)

தொடர்புக்கு
V.ஹரிதாஸ்
E-14, Ponni Apartment Anna Nagar, Chennai - 600 102.
போன் : 044-26222425 / கைபேசி : 9281341303
K.ரவிச்சந்திரன் கைபேசி : 98405 57733

## கொங்கு வேளாளர் திருமண தகவல் மையம்

**ஜாதகம் பதிவு செய்ய தேவைப்படும் சான்றிதழ்கள்....**

- ஜாதிசான்றிதழ் நகல் (அல்லது) பள்ளிசான்றிதழ் (TC)
- ஜாதகக் குறிப்பு, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 2, ரேஷன் கார்டு நகல்
- ஜாதகப் பதிவு கட்டணம் ரூ. 200/- (ஒரு வருட காலத்திற்கு மட்டும்)

**ஜாதகப் பதிவாளர் கவனத்திற்கு....**

- ஜாதகப் பதிவு அனைத்து நாட்களிலும் செய்யப்படும்.
- காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை செய்யப்படும்.
- ஜாதக நகல் மற்றும் விலாசம் திங்கட்கிழமை தவிர்த்து அனைத்து நாட்களிலும் வழங்கப்படும்.
- ஜாதக பொருத்தம் பார்த்த நகல் காண்பித்த பின்பு விலாசம் பெறவும்.
- வரும் பொழுது தவறாமல் அடையாள அட்டை கொண்டு வரவும்.
- திருமணம் உறுதி ஆனவுடன் தகவல் தெரிவிக்கவும்.
- திருமணத் தரகர் மற்றும் ஜோதிடர்களுக்கு அனுமதி இல்லை
- ஜாதகப் பதிவாளர்கள் திருமண தகவல் மையத்திற்கு ஒத்துழைப்பு நல்கவும்.


குறிப்பு :

- கொங்கு வேளாளர் திருமண தகவல் மையத்தில் வெளியாகும் வரன்களின் குடும்ப விவரங்களை விசாரித்து திருமணத்தை முடிவு செய்வது பதிவாளர்களின் முழு பொறுப்பாகும்.
- திருமண தகவல் மையத்தின் நடைமுறைகள் சங்கத்தின் நிர்வாகத்திற்கு உட்பட்டது.

10, புத்தர் வீதி, சீதாகல்யாண மண்டபம், எதிரில், கோபிசெட்டிபாளையம்,
போன் : 04285-348190, E-mail : kongu.ttmgobi@gmail.com

ஜாதகம் நகல் ஒன்றுக்கு ரூ. 5, முகவரி நகல் ஒன்றுக்கு ரூ. 5/-

❖❖❖❖❖



# மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | B.குறிஞ்சி குமார் BE., (E&I), MS in USA<br>(Hardware Engineer in USA) |
| பிறந்த ஊர் / பிறந்த தேதி | : | கரூர், 26-06-1983, 1:31 pm. |
| ஜன்ம நட்சத்திரம் | : | பூராடம், 3ம் பாதம், தனுசு ராசி |
| ஜன்ம லக்னம் | : | கன்னி |
| சொந்த ஊர் | : | மரகதபுரி, K.பரமத்தி, கரூர் |
| தந்தை | : | N.பாலகிருஷ்ணன், M.Com., AICWA<br>Chief Manager (Finance) in a PSU, சென்னை |
| தாயார் | : | உஷா Housewife |
| விலாசம் | : | No.71, 7வது அவென்யூ, சபரி கார்டன்<br>காஞ்திஜி ரோடு, கோவை - 641 027 |
| உடன் பிறந்தோர் | : | அக்கா 1, Married and working in USA |
| பையன் உயரம் நிறம் | : | 6"0" மாநிறம் |
| குலம் | : | ஆந்தை |
| மணமகள் எதிர்பார்ப்பு | : | 5'4" க்குமேல், மாநிறம், சிவப்பு |
| படிப்பு, வயது | : | B.E., / B.Tech, 20-22 yrs, USA செல்ல விருப்பம் உள்ளவர்<br>MS/Working in USA, 23-26 years |

| | | | |
|---|---|---|---|
| | | புத | சூரி, செவ் ராகு |
| | ராசி | | சுக் |
| | | | |
| சந் கேது | மாந் குரு | சனி | லக் |

| | | | |
|---|---|---|---|
| | கேது | | |
| சுக் | அம்சம் | | |
| சூரி | | | புத |
| மாந் | செவ், சனி | சந், ராகு | குரு லக் |

# உணவு

சென்ற இதழ் தொடர்ச்சி.... - பத்மஸ்ரீ பெ.தூரன்

“இந்தாம்மா, இந்தக் கொஞ்சத்தையும் சாப்பிட்டுக்கோ. இந்தா, இவ்வளவுதான்; இனி இல்லை; இனி இல்லை” என்கிறாள் தாய்.

“வேண்டாம் போ” என்கிறாள் கண்ணம்மா.

“இந்தாம்மா, நீ நல்ல பிள்ளையாச்சே; இந்தாம்மா, நான் உன்னை மடிமேல் வச்சுக்கறேன்வா, இந்தா, இதைச் சாப்பிடு.”

“ஊஹூம்; ஜன்னலுக்கு எடுத்துப்போனால் தான் சாப்பிடுவேன்.

ஜன்னலுக்கு எடுத்துக்கொண்டு போகிறாள். “இங்கே வேண்டாம், வாசலுக்குப் போ.”

வாசலுக்குப் போகிறாள்.

“கொஞ்சம் சர்க்கரை போட்டால்தான் சாப்பிடுவேன், இல்லாத போனா வேண்டாம் போ”

இப்படியே ஒவ்வொரு வேளையிலும் கண்ணம்மாளைச் சாப்பிடவைப்பது பெரிய சிரமமாக இருக்கிறது.

வேடிக்கை காட்டுவது, நிலாக்காட்டுவது, பூனையைக் கூப்பிடுவது இப்படியெல்லாம் செய்து குழந்தைக்குச் சோறு ஊட்டுவதை நாம் பார்த்திருக்கிறோம்.

ரெயிலுக்குப் போகலாம். இல்லாவிட்டால் மோட்டாரில் போகலாம் என்று குழந்தைக்கு ஆசைகாட்டுவது முதலிய பல வழிகளைக் கையாளுகிறார்கள் தாய்மார்கள்.

இப்படிப் பராக்கு காட்டி, வம்பு செய்து உணவு கொடுப்பது தவறான முறை என்று பண்டிதர்கள் சொல்கிறார்கள்.

குழந்தை சாப்பிடவில்லையே என்று தாய் கவலைப்படுவதை அது சுலபமாக அறிந்துகொள்கிறது. எப்படியாவது கொஞ்சம் சாப்பிடட்டும் என்று தாய் பராக்குக் காட்டுகிறாள்; ஆசை காட்டுகிறாள்; என்ன என்னவோ புதிய வழிகளைக் கையாளுகிறாள். இப்படியெல்லாம் செய்து தன்னைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கட்டும் என்று அந்தக் குழந்தை ஆசைப்படுகிறது. தன்னையே

எல்லோரும் கவனிக்கவேண்டுமென்று சின்னக்குழந்தைக்கு எண்ணமுண்டு, குழந்தை ஒரு வகையில் சுயநலம் அதிகமுடையது.

குழந்தை விளையாடிக்கொண்டிருக்கும். நீ அதைக் கவனியாமலிருந்தால் அது எப்படியாவது நீ அதன் மேல் கவனம் செலுத்தும்படி செய்துவிடும். அதற்குத் தன்னையே எல்லோரும் கவனிக்க வேண்டும் என்பதில் அத்தனை பிரியம்.

அதனால் குழந்தைக்கு உணவு கொடுப்பதில் முதலிலிருந்தே ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தாயின் கவலை அதற்கு தெரியக்கூடாது.

பசி இயல்பாக உண்டாகிறது. பிறகு குழந்தைக்குப் பிடித்த ருசியான உணவைக் கொடுத்தால் சாப்பிடுவதில் என்ன கஷ்டம் இருக்கிறது? குறிப்பிட்ட காலத்தில் அளவாக உணவு கொடுத்துக்கொண்டிருந்தால் குழந்தை ஒரு வகையான தொந்தரவும் செய்யாமல் சாப்பிடும்.

குழந்தை சாப்பிடாமல் இருப்பதற்குச் சில காரணங்கள் உண்டு. **(1)** குறித்த காலம் ஒன்றும் இல்லாது, நினைத்த வேளையில் உணவு கொடுப்பது **(2)** ஜீரணிக்க முடியாத உணவைக் கொடுப்பது அல்லது அளவுக்கு மிஞ்சிக் கொடுப்பது **(3)** உணவு கொள்ளும் நேரத்திற்குச் சற்று முன்பாக மிட்டாய் முதலிய பக்ஷணங்களைக் கொடுப்பது **(4)** குழந்தைக்குப் பிடிக்காத உணவை வற்புறுத்திக் கொடுப்பது.

பொதுவாக குறிப்பிட்ட காலங்களில் உணவும், தின்பண்டங்களும் கொடுப்பது நல்லது. அப்பொழுது தான் ஜீரணம் சரியாக ஆகும்; பசியும் ருசியும் ஏற்படும்.

சாப்பிடும்போது அமைதியும் மகிழ்ச்சியும் நிலவவேண்டும். உணவில் விருப்பம் உண்டாவதற்கும், ஜீரணசக்தி அதிகப்படுவதற்கும் அவை உதவுகின்றன. வற்புறுத்திச் சாப்பிடச் செய்வதால் உணவில் ருசி குறைந்து விடுகிறது.

சாப்பிடுவதற்கே இத்தனை தூண்டுதல் அவசியமானால் அந்தக் குழந்தை வேறு காரியங்களைத் தானே செய்ய எப்படிக் கற்றுக்கொள்ளப் போகிறது? ஆதலின் இவ்வுண்மையை மனத்தில் வைத்துக்கொண்டு குழந்தைக்கு உணவு கொடுக்கவேண்டும்.

தொடரும்....

❖❖❖❖

# செட்டிகுளம் சின்ன நிலம்

சென்ற இதழ் தொடர்ச்சி.... - பேராசிரியர் ப.க.பொன்னுசாமி

செட்டிகுளம்! பருவங்களில் தன் வயிறை நிரப்பி ஆயிரம் ஏக்கரில் நெல்லையும் கரும்பையும் செழிக்க வளர்த்துப் பள்ளிபுரம் கிராமத்தைப் பொறாமையோடு பார்க்க வைத்துக் கொண்டிருக்கும் நீர்த்தேக்கம். தன்னையும் உள்ளிட்ட ஏழு குளப் பாசனப்பரப்புக்கும் தலைப்புப் பகுதி. அவுகளுக்கு என்னப்பா, தலைக்கொளப் பாசானக்காரங்க!'' என்று பள்ளிபுரத்துக்காரர்களைப் பார்க்கும் போதெல்லாம் மற்ற குளப் பாசனக்காரர்களை அது பொறாமையுடன் சொல்ல வைக்கும்.

ஏறக்குறைய இந்தியாவின் வடிவம் மேற்குக் கிழக்காக அமைந்து தனது சுற்றோரத்தின் முக்கால் பகுதியில் வண்டி போகுமளவுக்கு அகலமான ஏரி மேட்டையும் கால் பகுதியில் அவ்வப்போது நீரில் மூழ்கிப் போகும் வயல் பகுதியையும் கொண்டது. அந்த நெடிய ஏரி மேட்டில் நடந்து கொண்டு நீரில் தெப்பத் தீவுகளாய் மிதந்து கொண்டிக்கும் நீர்ப்பறவைக் கூட்டங்களையும், வடபுற வயல் பகுதியில் எட்டியெட்டி அடிவைத்து நடந்து உணவுக்குத் தலை குத்தும் கொக்குக் கூட்டங்களையும் பார்க்கக் கிடைக்கும் சுகம் சொல்லி மாளாது!

தை மாதத்தில் மாட்டுப் பொங்கலன்று பள்ளிபுரத்து இளைஞர்கள் ஆடு, மாடு எருமை, நாய்களைப் பிடித்து வந்து ஆழமில்லாத குளப்பகுதிகளில் குளிப்பாட்டும் காட்சியும், எருமை, காளைகள் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு ஆழப்குதிகளுக்குச் சவாரி போய்த் திரும்ப விரட்டிக்கொண்டு வேகமாய்க் கரைக்கு வரும் போட்டிக் காட்சியும் - கரையில் நின்று வேடிக்கை பார்க்கும் கூட்டத்திற்குக்கொள்ளை மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

செட்டிகுளம் ஏரிமேட்டில் மேற்கே ஒரு கல் தூரம் போய்க்கீழே இறங்கினால் வருவது சின்ன நிலம் - எட்டு ஏக்கர் வயல். பக்கத்து வயல்களைவிட மேடானது. குளத்தின் இரண்டாம் மதகிலிருந்து ஏரிக்கரையோரம் வண்டிப்பாதையை ஒட்டிப்போகும் முதல் வாய்க்காலில் பத்து மடைகளைக் கடந்து தேங்கித் தேங்கித் தண்ணீர் இரைதின்ற பாம்பாய் ஊறித்தான் சின்ன நிலத்தில் நுழைய வேண்டும். அப்படி நுழையும்போது கண்ணுச்சாமி அவிழ்ந்து விழும் தனது உருமாலை இருபது முறையாவது மீண்டும் மீண்டும் தன்னையறியாமலே கட்டியிருப்பான்!

வாய்க்கால் கரையில் மதகுக்கும் வயலுக்குமாய்த் தொடர்ந்து நடந்து கொண்டிருக்காவிட்டால் மேல் மடைகளில் ஏதாவது ஒன்றிரண்டு பிய்த்துக்கொள்ளும் அல்லது அந்த மடைக்காரர்கள் அவற்றில் ஒன்றைத் திடீரென்று காலில் மிதித்துவிட்டு மறைந்து விடுவார்கள். சின்ன நிலத்தில் ஒரு கிணறு இருக்கிறது. ஏரிக்கரையிலிருந்து இருநூறு அடி தூரத்தில்தான் என்றாலும் பாறைப் பகுதியில் அமைந்து விட்டதால் அதில் தண்ணீர் அதிகம் ஊறாது. பாவம் கண்ணுச்சாமி ! மூலைக்கு ஒன்றாகவும், மற்ற பகுதிகளில்

மூன்றுமாக உள்ளூர் வெளியூர் ஜோசியர்கள் சொல்லியபடி கிணற்றில் ஏழு ஆழக்குழிகளையும் போட்டுவிட்டான். குடும்பம் கடன் பட்டதுதான் மிச்சம். குளத்தில் நீர் வற்றிய காலங்களில் கிணற்று நீரை நம்பி இரண்டு ஏக்கரில் கூட வெள்ளாமை வைக்க முடியாமல் சோர்ந்து போவான்.

கவலயப் பூட்டலாமா? வேண்டாமா? என்று யோசித்துக்கொண்டே காளைகளை இழுத்துக்கொண்டு கிணற்றுக்கு பாலுச்சாமி வந்து கொண்டிருந்தான். நீரேற்றும் சால்-பரியைத் தூக்கி உருளையில் வடக்கயிற்றின் வழியாகக் கிணற்றில் தொங்கவிட்டுக்கெண்டே தொளைமரத்தைப் பிடித்துக்கொண்டு எட்டி உள்ளே பார்த்த கண்ணுச்சாமி, “டே பாலு இப்பக் கவலயப் பூட்டி என்னடா பண்றது? இருவது சாலுத் தண்ணிகூட இல்லீடா, பத்துப் பாரு கூடப் பாயாதுடா, நாளைக்கிப் பூட்டிக்கிலாம்” என்று சொல்லிக்கொண்டே கிணற்றுப் பாம்பேரிச் சுவரில் உட்கார்ந்தான். அரைகுறையாய் நரைத்த தலைபோல வெள்ளையும் மஞ்சளும் வெளிர்ப்பச்சையும் கலந்த ஒரு நிறத்தில் சோர்ந்து காய்ந்து கொண்டிருந்த இரண்டு ஏக்கர் கரும்புப் பயிரையும் பார்த்துப் பெருமூச்சுவிட்டான்.

மூன்று வருசத்துக்கு முன்னால் நடந்தது கண்ணுச்சாமியின் மனதை நெருடியது. மழை பொய்த்துப்போக, கிணற்று நீர் போதாமல் நம்பி வைத்த நான்கு ஏக்கர் கரும்பும் காய்ந்து போனது. அந்தக் கரும்பு விளைந்து ஆலை ஆட்டியிருந்ததால் நூறு பொதி (200 மூட்டை) வெல்லம் கிடைத்திருக்கும். நாலாயிரம் ரூபாயைப் பார்த்திருப்பான். கடனைக் கொஞ்சம் அடைத்துவிட்டு, குடும்பச் செலவுக்கும், மூன்று குழந்தைகளின் படிப்புச் செலவுக்கும் ஓரளவுக்குக் கட்டுபடி ஆகியிருக்கும். காய்ந்துபோன வயலில் கொஞ்சம் பசையிருந்த கரும்புகளைப் பொறுக்கி வெட்டி நான்கு வண்டிகளில் பொள்ளாச்சிச் சந்தைக்குக்கொண்டு போய் வெறும் இருநூறு ரூபாயுக்கு விற்று வந்த அந்த நினைவிலிருந்து விரக்தியாய் விடுபட்ட கண்ணுச்சாமி, நாளைய உண்மை தீயாய்ச் சுட நிலை குலைந்து போனான். “பாழாப் போன மழ இப்பிடிப் பழியெடுக்குதே” என்று முணுமுணுத்துக் கொண்டே தூக்குப்போணியுடன் வந்து கொண்டிருந்த தன் மனைவி சின்னக்கண்ணுவைப் பார்த்தான் கண்ணுச்சாமி. ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகளைப் பெற்று வளர்த்துக்கொண்டு, மூன்றாவதற்கும் தாயராக இருப்பதுபோலத் தன் நடையில் வேகம் குறைத்து கிணத்து மேட்டிற்கு அவள் வந்து கொண்டிருந்தாள்.

“என்ன வேலயச் செஞ்சிருக்க? இப்பச் சோத்துக்கு என்ன அவசரம்?” என்று சலித்துக்கொண்டே மெல்ல எழுந்த கணவரைப் பார்த்து, “விவரமானவங்க கஷ்டப்படாமப் பொழைக்க வழி பாத்துக்கிட்டாங்க நாம் இப்பிடிக் கஷ்டப்படறோம்”. தேய்ந்து போன குரலில் தண்ணியில்லாத பூமியைப் பங்காக, வாங்கிக்கொண்ட தன் கணவனை அவள் நூறாவது முறையாகச் சாடுவது போலச் சொன்னாள். தொடரும்....

❖❖❖❖

# மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.குமார் |
| பிறந்த தேதி | : | 30-10-1981, 2.30 a.m. |
| நட்சத்திரம் | : | அனுஷம், பாதம்1 |
| இராசி | : | விருச்சிகம் |
| இலக்கணம் | : | சிம்மம் |
| தகப்பனார் பெயர் | : | M.கிருஷ்ணமூர்த்தி |
| தாயார் பெயர் | : | K.ராஜலட்சுமி |
| சொந்த ஊர் | : | கிழக்கு வலசு, இராசிபுரம் |
| கல்வி | : | B.E., (ECE) |
| வேலை | : | I.B.M. Bangalore |
| சம்பளம் | : | 70,000 p.m. |
| குலம் | : | பண்ணை (கோயில், அனுமன் பள்ளி ஈரோடு) |
| தேவை | : | Engineering any Degree<br>வேலையில் இருப்போர் / இல்லாதவர் |
| தொடர்பு | : | 95000 52818, 99420 62439 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | ராசி | | ரா |
| கேது | | | லக்<br>செ |
| | சந்<br>சுக் | சூ<br>குரு | புத<br>சனி |

| | | | |
|---|---|---|---|
| சுக் | | | |
| | அம்சம் | | செ<br>சனி, ராகு |
| சூரி<br>கே | | | சந்<br>புத |
| | | குரு | லக் |


## ROYAL AQUA R.O. WATER



**SALES & SERVICE**



**NO NEED TO BY CAN WATER.**
**YOUR WELL, BORE & METRO WATER WILL BECOME MINERAL WATER,**
**THROUGH OUR R.O. SYSTEM PLANTS**

**Domestic & Commercial Plants,**
**for Residence, Office, factory, Hotels & Hospitals**

**Krish Associate**
**For Free Demo**
**Contact :**

**9884790592, 9842751100**

**Email : royalaquarowater@gmail.com**

# LIC முகவர்களுக்கான தலைவர் மன்ற உறுப்பினர் திரு.எம்.சிவானந்தம் அவர்களின் வாழ்த்துக்கடிதம்

அன்புள்ள பரணி K.பாலசுப்பிரமணியம், செயலாளர், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அவர்களுக்கு எழுதிக்கொண்டது. வணக்கம்.

ஜூன் 2010 செய்திமடல் பார்த்தேன். தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழா நிகழ்ச்சியும், வாழ்த்துரைகளும், போட்டோகளும் அருமையாக இருந்தன. தங்களுக்கு எனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தங்களின் கொங்குபணி சிறக்க மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நன்றி !

இப்படிக்கு
எம்.சிவானந்தம்

## வாழ்த்துகிறோம்



ரூட்ஸ் நிறுவனங்களின் மனிதவள மேம்பாட்டுத்துறையின் தலைவரும், மேட்டுப்பாளையம் கல்லாறு சச்சிதானந்த ஜோதி நிகேதன் பள்ளியின் செயலாளருமாகிய சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு பாரதியார் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் வழங்கி உள்ளது.

கவிஞர் கவிதாசன் கோவையில் உள்ள பொறியியல் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் விற்பனைப் பிரிவு நிர்வாகிகளின் உணர்வு மேலாண்மை (Emotional Intelligence) குறித்து செய்த ஆய்விற்காக இந்த முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

முனைவர் பட்டம்பெற்ற சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது.

# வாழ்த்துகிறோம்



சென்னையை அடுத்துள்ள மணப்பாக்கம் யுனிடெக் பிளாஸ்டோ காம்ப்பொனன்ட்ஸ் (பி) லிட், தொழிற்சாலையை நிறுவி நடத்தி வருகின்ற பொறியாளர் மா.சுமதிக்குத் தமிழக அரசு மாநில அளவிலான சிறந்த பெண்களுக்கான தொழில் முனைவோர் விருதினை வழங்கியது. காஞ்சிபுரம் மாவட்ட அளவிலான சிறந்த தொழில் முனைவோர் விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. இந்த விருது 2006-2007 ஆம் ஆண்டுக்குரியது. 16-09-2009 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் அன்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் இவ்விருதினை வழங்கினார். அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி உடன் இருந்தார். விருதுடன் அதற்கான ரூ. 50,000 பணக்கொடையும் வழங்கப்பட்டது.

இவருடைய நிறுவனம் மாருதி சுசுகி, உண்டாய், மகிந்திரா அன் மகிந்திரா, பஜாஜ் ஆட்டோ, அசோக் லேலண்டு முதலான ஆட்டோமொபைல் நிறுவனங்களின் உதிரிபாகத் தயாரிப்பாளர்களுக்குத் தேவையான பொருள்களைத் தயாரித்து அளிக்கிறது. சுமதியின் கணவர் க.செகதீசனும் பொறியாளர். இவர் மருத்துவமனையில் ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் கருவிகள் குறிப்பாக டிஸ்போசபிள் சிரிஞ்சஸ் (Disposable Syringes) தயாரிப்புக்கான தொழில்நுட்ப வல்லுநராகவும், ஆலோசகராகவும் விளங்குகிறார். இப்பொருள்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறார். இந்திய அளவில் இத்தொழில்நுட்பத்தில் சிறந்த வல்லுநராக உள்ளார்.

தமிழக அரசின் மாநில அளவிலான சிறந்த பெண் தொழில் முனைவோர் விருது பெற்ற பொறிஞர் மா.சுமதி, இவரது வெற்றிக்குத் துணைநிற்கும் இவரது கணவர் பொறியாளர் க.ஜெகதீசன் ஆகியோரை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖

# இந்தியாவின் முதன்மை பெண்மணிகள்

இந்தியாவின் முதல் பெண் குடியரசுத் தலைவர், முதல் பெண் பிரதமர், முதல் பாராளுமன்ற சபாநாயகர் போன்றவர்களை உடனடியாகச் சொல்லி விடுவீர்கள். மேலும் இந்தியாவில் சில துறைகளில் முதன்மை பெற்ற சில பெண்மணிகள் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள ஒரு பட்டியல் இங்கே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இந்தியாவின் முதல் பெண் பிரதமர் | திருமதி. இந்திரா காந்தி |
| இந்தியாவின் முதல் பெண் குடியரசுத்தலைவர் | திருமதி பிரதீபா பாட்டில் |
| இந்தியாவின் முதல் பெண் பாராளுமன்ற சாநாயகர் | திருமதி மீராகுமார் |
| இந்தியாவின் முதல் பெண் செஸ் கிராண்ட் மாஸ்டர் | செல்வி விஜயலட்சுமி, சென்னை |
| இந்தியாவின் முதல் பெண் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்றவர் | திருமதி கர்ணம் மகேஸ்வரி (ஆந்திரா) |
| இந்தியாவின் முதல் பெண் விமானி | திருமதி சுசாமா (ஆந்திரா) |
| இந்தியாவின் முதல் பெண் அதிக நேரம் விமானம் ஓட்டி சாதனை செய்தவர் (18,500 மணி நேரம்) உலகின் முதல் பெண் விமானியும் இவர் தான்) | திருமதி துர்பா பானர்ஜி |
| இந்தியாவின் முதல் பெண் விண்வெளிக்கு சென்றவர் (இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்) | செல்வி Dr.கல்பனா சாவ்லா |
| இந்தியாவின் முதல் பெண் கிறிஸ்தவ மதகுரு | திருமதி மரகதவள்ளி டேவிட் |
| இந்தியாவின் முதல் பெண் ஞானபீடம் விருது பெற்றவர் | திருமதி ஆஷா பூரணதேவி |
| இந்தியாவின் முதல் முஸ்லிம் பெண் அரசி | செல்வி ரஸியா பேகம் |
| இந்தியாவின் முதல் முஸ்லிம் பெண் மேயர் | திருமதி அனிஸா மிர்சா (அகமதாபாத், குஜராத்) |
| இந்தியாவின் முதல் பெண் கப்பலோட்டிய மாலுமி | திருமதி உஜ்வாலா பாட்டில் |
| இந்தியாவின் முதல் பட்டம் பெற்ற பெண் | செல்வி காதம்பினி கங்குலி |
| இந்தியாவின் முதல் பெண் போஸ்ட் மாஸ்டர் | திருமதி கன்வால் வர்மா |
| இந்தியாவின் முதல் பெண் கிரிக்கெட் நடுவர் | திருமதி அஞ்சலி ராஜகோபால் (தமிழ்நாடு) |

| | |
|---|---|
| இந்தியாவின் முதல் ஆட்டோ ஓட்டுனர் உரிமம் பெற்ற முதல் பெண் | திருமதி ஷீலாடோவர் |
| இந்தியாவின் முதல் பெண் புகைப்படக்காரர் | திருமதி ஹோமய் வ்யாரவல்லா |
| இந்தியாவின் முதல் பெண் சிற்பி | திருமதி மணி நாராயணி |
| இந்தியாவின் முதல் பெண் துப்பறியும் நிபுணர் | திருமதி ரஜினி பண்டிட் |
| ஆங்கில படையுடன் போரிட்டு வெற்றிபெற்ற முதல் பெண் அரசி | திருமதி ராணி வேலு நாச்சியார் (மதுரை கோச்சடைப்போர்) |
| இந்தியாவின் திட்டக்கமிஷனின் முதல் பெண் உறுப்பினர், பத்மபூசன் விருது பெற்ற முதல் பெண் மணியும் இவர்தான் | திருமதி துர்க்கா பாய் தேஷ்முக் |
| இந்தியாவின் முதல் பெண் மேயர் (டெல்லி) | திருமதி அருணா ஆசுஃப் அலி |
| உப்பு சத்தியாகிரப் போரட்டத்தில் சிறைத் தண்டனை பெற்ற முதல் இந்திய பெண் | திருமதி ருக்மணி லெட்சுமிபதி |
| இந்தியாவின் முதல் எவரெஸ்ட் சிகரம் ஏறிய பெண் | செல்வி பச்சேந்திரிபால் |
| இந்திய தேசிய காங்கிரஸின் அயல்நாட்டு முதல் பெண் தலைவர் | திருமதிஅன்னிபெசன்ட் அம்மையார் |
| இந்தியாவின் முதல் பெண் புக்கர் விருது பெற்றவர் | சமூக சேகவி, அருந்ததி ராய் |
| பாரத ரத்னா விருது பெற்ற முதல் பெண் இசைக்கலைஞர் | திருமதி எம்.எஸ்.சுப்புலெட்சுமி |
| இந்தியாவில் முதலில் லட்சம் ரூபாய் பெற்ற பெண்மணி | திருமதி கே.பி.சுந்தராம்பாள் |
| ஆக்ஸிசன் இல்லாமல் எவரஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண் வீராங்கனை | செல்வி பூதோர்ஜி |
| ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்திய வீராங்கனை | செல்வி ஆர்த்தி சாஹா |
| ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்த முதல் இந்திய வீராங்களை | செல்வி ஆர்த்தி சாஹா |
| இந்தியாவின் முதல் உயர்நீதிமன்ற பெண் தலைமை நீதிபதி | திருமதி லீலா சேத் |
| இந்திய இராணுவ பதக்கம் பெற்ற முதல் பெண்மணி | திருமதி பீம்லா தேவி |

நன்றி - ஜெய ஸ்ரீ மகேந்திரன் சங்கரன்கோவில்
தொகுத்தவர் : ஊத்தங்கரை P.ராமசாமி
செயற்குழு உறுப்பினர்

❖❖❖❖